[2020 ஜனவரி 8

10—

நவீன ரக மீன் வகைகளை வளர்த்தல்

***48902—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *காட்டுமன்னார்கோவில் தொகுதி, வீராணம் ஏரியில் நவீன ரக மீன் வகைகளை வளர்க்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதிக்குட்பட்ட வீராணம் ஏரியில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்திட ஆண்டுதோறும், அதாவது பசலி ஆண்டு, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மீன் வளத் துறையின் மூலமாக நவீன ரக இந்திய பெருநகர கெண்டை இனங்களான கட்லா, ரோகு, மிர்கால், ஜெயந்தி ரோகு, சாதா கெண்டை ஆகியவை வருடா வருடம் 15.08 இலட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, வளர்க்கப்பட்டு வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தால், கோலத்தால், சீலத்தால் அழிக்க முடியாத காவியத் தலைவி, உங்களையும் என்னையும், ஆளாக்கி அழகுபார்த்த அன்புத் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளைப் போற்றி வணங்குகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் என்னுடைய ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 ஜனவரி 8]

மத்திய அரசு வெளியிட்ட நல் ஆளுமைத் திறனுக்கான குறியீட்டுப் பட்டியலில் இந்திய தேசத்தில் இருக்கக்கூடிய 18 பெரிய மாநிலங்களில், ஒட்டுமொத்த தர வரிசையில் தமிழ்நாடுதான் முதலிடம் என்கின்ற பெருமையைப் பெற்றுத்தந்தும், (மேசையைத் தட்டும் ஒலி) India Today என்கின்ற பத்திரிகை மேற்கொண்ட ஆய்விலும், ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க மாநிலம் தமிழ்நாடு என்று தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் முதலிடம் பெற்றுத்தந்தும், நாடும், ஏடும் போற்றுகிற நல்லாட்சி நடத்தி வருகிற மாட்சிமைதாங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் இருக்கக்கூடிய வீராணம் ஏரி 15 கிலோ மீட்டர் நீளமும், 5 கிலோ மீட்டர் அகலமும் ஒன்றரை டி.எம்.சி. கொள்ளளவும் கொண்ட ஒரு பாரம்பரியமான ஏரி. அந்த ஏரியில் நவீன ரக மீன் வகைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளித்திருக்கிறார்கள். அவருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அங்கிருக்கக்கூடிய மக்கள், குறிப்பாக, லால்பேட்டையில் இருக்கக்கூடிய இஸ்லாமிய சகோதரர்கள் அசைவ பிரியர்களாக இருக்கிறார்கள். அங்கே மீன்களை வளர்த்து, அதனைப் பிடித்து, விற்பனை செய்வதற்கு ஒரு மீன் விற்பனை மையத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவாரா என்பதையும், அங்கே புதிதாக அமைக்கப்பட்டிருக்கக்கூடிய மீன் பண்ணையைப் புனரமைத்து, நவீனப்படுத்தி, அங்கேயும் மீன்களை வளர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மீன் ஒரு சிறந்த உணவு என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.*

[2020 ஜனவரி 8

உலகத்திலேயே மீனைக் காட்டிலும் ஒரு சிறந்த உணவு நிச்சயமாக இருக்க முடியாது. ஏனென்று சொன்னால், மீன் சாப்பிடுபவர்களுக்கு, பொதுவாக heart attack–ஏ வராது. Skin நன்றாக இருக்கும்; கண் நன்றாகத் தெரியும்; Cancer வராது. இந்த நான்குமே மிகவும் முக்கியம். (குறுக்கீடு) உள்நாட்டு மீன்கள் மற்றும் கடல் மீன்கள் எல்லாவற்றுக்குமே இந்தச் சிறப்பு உண்டு. தொடர்ந்து மீன் சாப்பிடுவதால்தான் கிட்டத்தட்ட 55 வயதிற்குப் பின்னர்தான் கண்ணாடி போட்டேன். (சிரிப்பு) சின்ன வயதில் கண்ணாடி போட்டது கிடையாது. எனவே, மீன் ஒரு சிறந்த உணவு. சிறந்த புரதம் அதில் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான், மீனவர்களுடைய infrastructure–ஐ, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக மட்டும் உள்நாட்டு மீன்வர்களுக்கும், கடலோர மீனவர்களுக்கும் கிட்டத்தட்ட 1,000 கோடி ரூபாயை வழங்கிய ஒரே அரசு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் மீன் விற்பனை செய்கின்ற ஓர் அங்காடி வேண்டுமென்று கேட்டார்கள். பொதுவாகவே, இதையெல்லாம் ஊக்கப்படுத்த வேண்டுமென்பதற்காகவே, அரசைப் பொறுத்தவரையில், எட்டு இலட்சம் ரூபாய் மானியம் அளிக்கின்றது. எனவே, அந்த எட்டு இலட்சம் ரூபாயை சுய உதவிக் குழுக்கள் மூலமாகவோ அல்லது வேறு யாராவது நடத்த முன்வந்தாலும்கூட, அந்த மீன் விற்பனை அங்காடியை உறுப்பினர் அவருடைய தொகுதியிலே அமைப்பதற்குண்டான எல்லா ஏற்பாடுகளும் நிச்சயமாக அரசால் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 5 இலட்சம் டன் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதன்மூலமாக, கிட்டத்தட்ட 5 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இந்திய நாட்டிற்கு அந்நியச் செலாவணி கிடைக்கின்றது. எனவே, இன்றைக்கு எல்லாத் தொழில்களைக் காட்டிலும், இன்னும் அதிகமான அளவிற்கு நாம் கவனம் செலுத்த வேண்டிய துறையாகத்தான் நம்முடைய மீன் வளத் துறை இருக்கின்றது. அதாவது, employment opportunity, potentiality எந்தத் துறையில் இருக்கிறது என்று சொன்னால், மீன் வளத் துறையில்தான் அதிகமான opportunities இருக்கின்றன. எனவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல,

2020 ஜனவரி 8]

தனியார்கள் பொதுவாகவே முன்வர வேண்டும். தனியார்கள் என்று சொன்னால், நம்முடைய மீனவர்கள், அதேபோல சுய உதவிக் குழுக்கள், மீனவ மகளிர்கள், சிறு தொழில்முனைவோர்கள்.

என்னைப் பொறுத்தவரையில், 1981 ஆம் ஆண்டில் B.Sc. Chemistry *படித்து முடித்துவிட்டு, அரசு வேலைக்குச் செல்ல நான் ஆசைப்படவில்லை.* B.Sc. Chemistry *படித்து முடித்துவிட்டு, என்னுடைய ஆரம்பகால வாழ்க்கையை ஒரு சிறு தொழில்முனைவோராகத்தான் ஆரம்பித்தேன். எல்லோருக்கும் வேலை தர வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. கிட்டத்தட்ட மூன்றரை இலட்சம் பேர், 2011—லிருந்து இதுவரை 3 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்திருக்கின்றோம். எல்லோருக்கும் வேலை தர வேண்டுமென்பது அரசினுடைய நோக்கமாக இருந்தாலும்கூட, உடனடியாக வழங்க முடியாது. அதற்காகத்தான் இன்றைக்கு ஊரகத் தொழில் துறை, தொழில் துறை, மீன் வளத் துறை, விவசாயத் துறை, இதுபோன்ற பல்வேறு துறைகளிலே, சிறு தொழில்முனைவோர்கள், குறிப்பாக இளைஞர்கள் கவனம் செலுத்தி, அவர்கள் முறையாக அரசை அணுகினால், நிச்சயமாக எல்லாவிதமான மானியங்கள், மற்றும் உதவிகளைக்கூட அரசு வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றது.*

1981—1982—ல் எல்லாம் Single Window Scheme*—யே கிடையாது. இப்போது ஒரு தொழில்முனைவோர் வந்தால்* Single Window Scheme*—ல் அவர்கள் தொழில் தொடங்க எல்லா* clearance*—ம் வாங்கிவிடலாம். அந்த அளவிற்கு இன்றைக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னதுபோல, “என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்”; அதேபோன்று “நான் பிறந்த நாட்டுக்கு எந்த நாடு பெரியது” என்கின்ற வகையில், எல்லா வளமும் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிறது. அதற்குண்டான* opportunities *மீன் வளத் துறையில் இருப்பதால், இளைஞர்களுக்கு வேண்டுகோளாக வைப்பது, சிறு தொழில்முனைவோராக வந்தால் நம்முடைய கிராமப்புறப் பொருளாதாரம், நம்முடைய தமிழ்நாட்டினுடைய பொருளாதாரம், இந்தியப் பொருளாதாரம் உயர்வதற்கு வேண்டிய வழிவகைகள் செய்து தரப்படும். இன்றைக்கு கூண்டிலே மீன் வளர்ப்பு; அது ஒரு நல்ல தொழில். உதாரணத்திற்கு* sea bass *என்று சொல்லக்கூடிய கடல் கொடுவா, இதையெல்லாம் வளர்த்தால் தாராளமாக இலாபம் கிடைக்கும். அதேபோன்று* inland fish culture, *உள்நாட்டு*

மீன் உற்பத்தியைப் பொறுத்தவரையில் கட்லா, மிர்கால், ரோகு, காமன்காப், சில்வர்காப், புல் கெண்டை, கிப்ட் திலேபியா, ஜெயந்தி ரோகு இவற்றையெல்லாம் வளர்ப்பதன் மூலமாக நல்ல இலாபம் கிடைக்கும். உதாரணத்திற்கு 1 ஹெக்டேரில் மீன் வளர்த்தால், 10 மாதங்களில் ஒரு இலட்சம் ரூபாய் சம்பாதிக்கலாம். இதுவெல்லாம் இலாபம் ஈட்டக்கூடிய நல்ல தொழில் என்பதால், இளைஞர்கள் முழுமையான அளவிற்கு ஒரு தொழில்முனைவோராக வர வேண்டுமென்பதுதான் ஆசை. அப்படி அவர்கள் வரும்போது அரசும் சரி, மீன் வளத் துறையும் சரி, எல்லாவிதமான ஆக்கமும், ஊக்கமும் நிச்சயமாக அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய விளக்கம் அளித்திருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் மீன் வளர்ப்பதற்கு அரசு புதிய நலத் திட்டங்களை வழங்கி, ஊக்கப்படுத்துமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலிலே நான் அதைக் குறிப்பிட்டிருக்கின்றேன். தற்போது தமிழகத்தைப் பொறுத்தளவிற்கு, 3 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் 25 இலட்சம் ரூபாயில் 40 சதவிகித மானியம் வழங்கப்பட்டு, மொத்தம் 4,124 பேர், தங்கள் மீன் பண்ணைகள்மூலம் மீன் வளர்ப்பினை மேற்கொண்டு, 15 ஆயிரம் டன் அளவிற்கு மீன் உற்பத்தி செய்யப்படுகின்றது. எனவே, தனியார் முன்வந்தால், நிச்சயமாக அவர்களுக்குண்டான எல்லா வசதிகளும் செய்யப்படும். பொதுவாக, இன்றைக்கு* Aquaculture Estate*; இந்தத் துறையிலேகூட அதுகுறித்து ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதாவது, எங்கெங்கெல்லாம் விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்கள் இருக்கின்றனவோ,*

2020 ஜனவரி 8]

அவை கண்டறியப்பட்டு, mapping *செய்யப்பட்டு வருகிறது. ஒரு தனியார் தொழில் தொடங்கிட முன் வந்தால், அவரே போய் ஒரு ஹெக்டேர்* land *வாங்கி, எல்லாவிதமான* infrastructure*–ஐயும் அவர்களாகவே* develop *செய்திட வேண்டும். அப்படி இல்லாமல்* SIDCO, SIPCOT *மாதிரி, முழுமையான அளவிற்கு* land*–ஐ* acquire *செய்து, அதன்பிறகு குறிப்பிட்ட பகுதியில், ஒரு ஹெக்டேர், இரண்டு ஹெக்டேர் என்று பிரித்து, அங்கு* infrastructure*–அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, அதன்மூலம் அவர்களுக்கு* technology *கொடுத்து,* bank loan *கொடுத்து,* subsidy *கொடுத்து, அவர்களை ஒரு தொழில்முனைவோராக ஆக்க வேண்டுமென்ற அந்தப் பரிசீலனையும் அரசினுடைய கவனத்தில் இருக்கின்றது.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

நீதிமன்றம்

***47212—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சியில் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியிலே ஒரு நீதிமன்றம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மொடக்குறிச்சி தொகுதியில் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்று எந்தப் பரிந்துரையும் உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.